# மங்கையராய்ப் பிறப்பதற்கே

## முன்னுரை

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல

மாதவம் செய்திட வேண்டுமம்மா - கவிமணி.

பரந்துவிரிந்த இவ்வுலகில் தன் ஆளுமையால் அனைவர் உள்ளத்திலும் நிறைந்தவர்கள் மிகச் சிலரே. அன்பும் அறிவும் பிற திறன்களோடு இணைந்து விட்டால் அவர்கள் கொண்டாடப்பட வேண்டியவர்கள் தானே ?

## எம்.எஸ்.சுப்புலட்சுமி

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

இசைப் பேரரசி என்று நேருவால் அழைக்கப்பட்டவர் மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி. ஐந்தாம் வகுப்பு வரைதான் பள்ளிக்கல்வி. பதினேழாம் வயதில் சென்னை மியூசிக் அகாதெமியில் கச்சேரி. தாமரையணி, தாமரைச் செவ்வணி, இந்திய மாமணி எனப் பல விருதுகள். மீரா திரைப்பட நாயகி. இன்றும் காற்றினிலே வரும் கீதம் கேட்டால் மனம் கரையும்.

## பாலசரஸ்வதி

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

ஜன கண மன பாடலுக்கு ஆடிய பரதக் கலைஞர் 7 வயது முதல் பயிற்சி. 15 வயதில் இவரது நாட்டியம் பண்டிட் இரவிசங்கரால் பாராட்டப்பட்டது. டோக்கியோவில் நடைபெற்ற கிழக்கு - மேற்கு சந்திப்பு நிகழ்வில் இந்தியாவின் சார்பில் கலந்துகொண்டு பரதநாட்டியம் பார் புகழச் செய்தார்.

## ராஜம் கிருஷ்ணன்

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

சமூகச் சிக்கல்களை களப்பணியாற்றிக் கதைகளாக உருவாக்கியவர் இவர். பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, கரிப்பு மணிகள், குறிஞ்சித்தேன், அலைவாய்க் கரையில், வேருக்கு நீர், கூட்டுக் குஞ்சுகள் ஆகிய புதினங்கள் இவர் யாரெனச் சொல்லும்.

## கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

உழுபவருக்கே நில உரிமை இயக்கம், பூதான இயக்கம் மூலம் உழவர்களுக்காகப் போராடியவர் இவர். மதுரையின் முதல் பட்டதாரிப் பெண்ணான இக்காந்தீயத் தொண்டர் இந்திய அரசின் தாமரைத்திரு விருது பெற்றவர். வெள்ளையருக்கு எதிரான போராட்டங்களிலும் கலந்து கொண்ட இவர் சர்வோதய இயக்கத்தின் களப்பணியாளர்.

## மதுரை சின்னப்பிள்ளை

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

பெண் ஆற்றல் விருதை இவருக்குக் கொடுத்து விட்டு காலில் விழுந்து ஆசி பெற்றார் முன்னாள் பிரதமர் வாஜ்பாய். களஞ்சியம் தொண்டு நிறுவனத்தின் இந்த ஆணிவேர் முப்பது ஆண்டுகளாய் முகம் சுளிக்காது சேவை செய்து வருகிறது. இந்திய அரசின் தாமரைத்திரு விருதுக்குச் சொந்தக்காரர் இவர்.

## முடிவுரை

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என்றார் பாரதி. ஆம், திறமை உள்ளவர் ஆணாயிருந்தாலும் பெண்ணாய் இருந்தாலும் போற்றி வணங்கத் தக்கவரே. பெண்கள் நம் நாட்டின் கண்கள் !

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM